
ராணி
காமிக்ஸ்
முகமூடிவீரர் மாயாவி தோன்றும்
தங்கத் தீவு

நடை ஒரு மருந்து!

நடை ஒரு மருந்து உடல்
நலம் தரும் விருந்து!
விடைபெறும் நோய்கள் இந்த
விடியல் நடையால்!

எடையும் குறையும்— எழில்
இளமை நிறையும்
இடையும் சுருங்கும்— உன்
இதயம் நன்கு இயங்கும்!

தடைகள் விலகும்— முதிய
தசைநார் இறுகும்
அடையும் தேகம் ஆற்றல்— நடை
ஆனைப் பலத்தைத் தோற்றும்— (நடை ஒரு)

—எட்டயபுரம் பா.நா. கணபதி.

ராணி காமிக்ஸ் – 295
(மாதம் இருமுறை இதழ்)
TV
அக்டோபர் 1 – 15
1996

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்

தங்கத் தீவு

300 ஆண்டுகளுக்கு முன்பு கறுப்பு மாமன்னர் ஜூஅன்கர் வேட்டையாட காட்டுக்கு வந்தார். அப்போது ஒரு சிங்கம் அவரை கொல்ல முயன்றது. அப்போது அங்கு வந்த 7—வது மாயாவி ஜூஅன்கர் மன்னனை காப்பாற்ற சிங்கத்துடன் போரிட்டார். முடிவில் சிங்கம் பயந்து காட்டுக்குள் ஓடியது.
அதிலிருந்து ஜூஅன்கர் மன்னனும் மாயாவியும் நல்ல நண்பர்கள் ஆனார்கள்.
அதைவிடு மாயாவி! நான் மணக்கப் போகும் அழகி இங்கே வாப்போகிறாள்!
எனக்குத்தான் வெற்றி!
ஆனால் அந்த மணமகளை கடற்கொள்ளையர்கள் பிடித்து வைத்துக்கொண்டு மிரட்டினார்கள்.
10 இலட்சம் கொடுத்தால் இவளை உயிரோடு விடுவோம். இல்லை... சாவுதான்!
10 இலட்சம் தருகிறேன்!
ஜூஅன்கர் அவசரப்படாதீங்க!

அதற்குள் மாயாவி கடற்கொள்ளையரின் கப்பலுக்குச் சென்று
இளவரசியை மீட்டு அந்தக் கப்பலையும் அழித்தார்.

ஜூஉன்கர்! இதோ உங்கள் மணமகள்!


பிறகென்ன ஜூஉன்கரின் திருமணம் நடந்தது. மணமக்கள்
தேனிலவுக்காக காட்டுக்கு அருகில் உள்ள தங்கத்தீவுக்கு வந்தார்கள்.
அங்கே இருந்த மரகதக் குடிலுக்கு
மணமக்கள் சென்றார்கள்.

ஆனால், திடீரென்று பிரசவத்தின்போது ஜூன்கர் மன்னரின் மனைவி இறந்து போனாள். அதில் இருந்து ஜூன்கர் மன்னர் பித்துபிடித்தவர் போல ஆனார்.
மாயாவி! இனி நான் இந்தத் தீவு பக்கமே வரமாட்டேன். அதனால் இதை உனக்கே கொடுத்து விடுகிறேன்!

அதிலிருந்து மாயாவியின் பல தலைமுறையினர் தேனிலவுக்காக தங்கத்தீவுக்கு வந்து மரகத குடிலில் இன்பமாக இருந்தார்கள்

அதிலிருந்து ஆண்டுதோறும் ஏராளமான திருமணங்கள் தங்கத்தீவில் நடந்தன.
இப்போது நீயும், அவளும் திருமணம் செய்துகொள்வீர்கள்!


திருமணம் முடிந்ததும் மணமக்கள் அங்குள்ள கடலில் மகிழ்ச்சியுடன் குளிப்பார்கள்.


அதன்பிறகு கடற்கரை மணலில் உருண்டு புரளுவார்கள்.
அந்த தங்க மணல் அவர்கள் உடம்பில் ஒட்டி மின்னும்.


அதன்பிறகு மரகதக் குடிலில் தேன்நிலவு நடக்கும்.
பல நாள் அங்கு உல்லாசமாக சுற்றித் திரிவார்கள்.


ஒரு நாள்— காட்டுக்குள் ஒரு ஜீப் வந்தது.
என்னடா இது?
இதுதான் மாயாவியின் மலைமுகடு!
டேய்... அதோ மான்!

இது வாம்பசியினர் கிராமம்! இங்கே மிருகங்களை வேட்டையாடக் கூடாது!
நீ காரோட்ட வந்த கூலிப்பயல். எங்களுக்கு புத்தி சொல்கிறாயா?


எதிர்ப்பட்ட மிருகங்களை வேட்டையாடிக் கொண்டே வந்தார்கள்.
டுமீல்....!

உணவுக்காகத்தான் மிருகங்களை வேட்டை யாடணும்!
போதும்டா உன் உபதேசம்! ஜீப்பை கடற்கரையை நோக்கி ஓட்டு!
ஆகா! கடற்கரைக்கு அருகில் வந்துவிட்டோம்! கடலில் களைப்பு தீர குளிக்க வேண்டும்!
ஜீப் தங்கக் கடற்கரையை நெருங்கியது.
ஆகா...! என்ன அழகான கடற்கரை!

ஜீப்பை ஏன் திருப்புகிறாய்! நிறுத்து நாங்கள் குளிக்கணும்!
டேய்...! உன் கட்டுக்கதையை எல்லாம் என்னிடம் உளறாதே!
அய்யோ இது மாயாவியின் கடற்கரை! யாரும் குளிக்கக்கூடாது!
டேய்... மரியாதையாக ஜீப்பை இங்கே நிறுத்து! இல்லை தலை சிதறிவிடும்! ஹா... ஹா...!
முடிவில் அவர்கள் கடலில் இறங்கி உல்லாசமாக குளித்தார்கள்.
அடேயப்பா! என்ன அற்புதமான கடற்கரை! இங்கு ஒரு ஓட்டல் கட்டினால் எப்படி இருக்கும்!



மொட்டையன் கடலில் குளித்துவிட்டு மணலுக்கு வந்தான்.—



அவனுக்கு பித்தும் தலைக்கு ஏறிட்டதுன்னு நினைக்கிறேன்!
டேய்....! மொட்டை தங்கத்தை காட்டு பார்க்கலாம்!


அதோ பாருடா! உன் காலில்கூட தங்கம் ஒட்டியிருக்கிறது!
டேய் மொட்டை! மணல் ஒட்டத்தான் செய்யும்!


முட்டாள்! பத்து ஆண்டாக நான் நகைகடை வைத்தவன்டா? தங்கம் எதுன்னு எனக்குத் தெரியாதா?
தங்க நகை கடை! ஓ... கள்ள சரக்கு வாங்கி விற்றிருப்பாய்...!

அவர்கள் டிரைவரிடம் அந்த இடம்பற்றி விசாரித்தார்கள்.
ஏய்... இது என்ன இடம்!
இது தங்கத்தீவு! திருமண ஜோடிகள் இங்கே திருமணத்துக்கு வருவாங்க!
ஆனால், அன்பில்லாமல் இந்த கடற்கரைக்கு வருகிறவர்கள் பரிதாபமாக இறப்பார்கள்!
டேய்...! அந்தக் காட்டான் கதையை கேட்டாயா?
பார்த்தாயா? இதில் பாதி மணல்! பாதி தங்கம் இருக்கிறது!
அப்போது காட்டுப்பையன் ஒருவன் அவர்களை நோட்டமிட்டான்.
உடனே அவன் மண்டைஓட்டுக் குகையில் இருந்து மாயாவிக்கு முரசு மூலமாக செய்தி அனுப்பினான்.
மாயாவியாரே! வெளி ஆட்கள் தங்கத் தீவுக்குள் நுழைந்திருக்கிறார்கள்!

செய்தியைக் கேட்ட உடனே மாயாவி புறப்பட்டார்.
சூரன்! நான் புறப்பட்ட செய்தியை உடனே அனுப்பு!

காட்டில் முரசுகள் முழங்கின.
மாயாவியாரே! வெளி ஆட்கள் தங்கக் கடற்கரைக்குள் நுழைகிறார்கள்!
மாயாவி! தங்கக் கடற்கரைக்கு புறப்பட்டு விட்டார்!


கடற்கரையில்—
இங்கே கூட அதே மணல்தான்!
இங்கேயும் தங்க் மணல்தான்!
பலே!

ஆகா! இந்த கடற்கரை மணல் பல இலட்சம் பெறும்!
முட்டாள் கோடியே பெறும்!

மாயாவியாரே! தங்கத்திவில் வெளி ஆட்கள்!
மாயாவி புறப்பட்டுவிட்டார்!
இது என்ன சத்தம்!
முரசு மூலமாக செய்தி போகிறது!

வரக்கூடாத இடத்துக்கு வந்திருக்கிங்கன்னு முரசு சொல்லுது!
அதோ! அங்கே ஒருவன் முரசு அடிக்கிறான்!


அட! காட்டில்கூட உளவாளி இருக்கிறான்! அவனை சுட்டுத்தளளுகிறேன்!
வேண்டாம்!
டுமீல்.....!

நம்மை சுடுகிறான்!


உடனே முரசு அடிப்பவன் எதிரில் பாய்ந்தான்.
ஆ...ஆ...ஆ...

மாயாவி! தங்கக் கடற்கரைக்கு வருகிறார்!
தங்கக் கடற்கரையில் இருந்து வந்த முரசு சத்தம் நின்றுவிட்டதே! ஏதோ விபரீதம் நடந்திருக்கும் போலத் தெரிகிறது!


அவனை சுட்டுத்தள்ளி விட்டுட்டேன்! ஆள் இருக்கானா, போயிட்டானா என்று பார்ப்போம்!
நாம் வந்தது இரகசியமாக இருக்க வேண்டும்! தமுக்கடிச்சு செய்தியை பரப்பக் கூடாது!

இங்கேதானே இருந்தான்!
முரசு இருக்கு! ஆளைக் காண வில்லையே?
அவனைத்தான் விரட்டி அடிச்சுட்டோமே!

இந்தக் கடற்கரையில் டன் கணக்காக தங்கம் கொட்டிக் கிடக்குது! எப்படி எடுத்துப் போவது!
அதற்கு நான் ஒரு யோசனை வைத் திருக்கிறேன்!
கப்பல் கொண்டு வந்து....!
தண்ணீருக்கு அடியில் பாறை. கப்பல் வரமுடியாது! பேசாமல் லாரியை கொண்டு வரலாம்!
500 மைல் காட்டைத் தாண்டிச் செல்ல வேண்டும்! அதனால் ஹெலி காப்டர்தான் சரி!
இவர்களை எதுக்கு நம்முடன் வைத்திருக்க வேண்டும்!
ஒரு பங்குகூட இவன்களுக்கு கொடுக்கக் கூடாது!
முழுத்தங்கம் என் கைக்கு வர வேண்டும்'
ஆளாளுக்கு ஒருவரை வெட்டிவிட திட்டம் போட்டார்கள்.

அதே நேரம்— மாயாவி குதிரையில் விரைந்து வந்துகொண்டிருந்தார்.
கார் தடம் தெரிகிறது. தங்கக் கடற்கரைக்குத்தான் சென்றிருக்கிறார்கள்!

வழியில் வரிக்குதிரை குண்டடிபட்டு செத்துக்கிடந்தது.
பாவிகள்! அப்பாவி மிருகங்களை வேட்டையாடி யிருக்கிறார்கள்!

இன்னொரு இடத்தில்— மான் அடிபட்டுக் கிடந்தது.
முட்டாள்கள் உயிரைக் கொன்றுவிட்டு குதூகலப்படுகிறார்களே? விடக்கூடாது அவர்களை!

அப்போது— ஒரு மரத்துக்கு பின் இருந்து முரசு அடிப்பவன் வெளிப் பட்டான்.
மாயாவி!
மாயாவி அவன் காயத்துக்கு கட்டுப் போட்டார்.
மாயாவி! அவர்கள் மிகவும் மோசமானவங்க! அவர்கள் என்னை சுடவந்தார்கள். சாகாமல் தப்பிவிட்டேன்!
பேசாமல் ஓய்வெடு! நீதான் தைரியசாலி என்று எனக்குத் தெரியுமே?
கடற்கரையில்—
இந்த டிரைவரை என்ன செய்வது?
நமக்கு வழிகாட்ட இவன் வேண்டும் பிறகு இவன் கதையை முடிப் போம்!
என் காதிலே விழாது என்று பேசுகிறார்கள்! எனக்குத்தான் கழுதை காது' ஆயிற்றே..!

இவர்களுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும்!


டிரைவரான காட்டுவாசி ஜீப்பை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்
ஏய்... எங்கே போகிறாய்?
ஜீப்பை நிறுத்துடா...!


டிரைவர் ஜீப்பை விரட்ட அவர்கள் அவனை சுட முயன்றார்கள்.
டேய்... அவனை விடாதே! சுட்டுத்தள்ளு!

மொட்டையன் ஜீப்பை சுட்டான்.
டுமீல்...!
டுமீல்...!

காட்டுக்குள் ஒரு இடத்தில் ஜீப் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. டிரைவர் மயக்க நிலையில் இருந்தான். அப்போது, மாயாவி அங்கே வந்தார்.


மயங்கிக் கிடந்த டிரைவரை மாயாவி வெளியே தூக்கினார்.

மாயாவி அவனை வெளியே தூக்கவும், ஜீப் வெடித்துச் சிதறவும் சரியாக இருந்தது.
டுமீல்...!
டிரைவர் மயக்கம் தெளிந்தான்.
உனக்கு ஒன்றுமில்லை! குண்டு படலை! லேசான அதிர்ச்சிதான்!
மாயாவி! அவர்கள் மிகவும் மோசமானவங்க! எச்சரிக்கையுடன் இருங்கள்.
மொட்டை! என்ன மடத்தனம் செய்தாய். இனி நாம் எப்படி புறப்பட்டுச் செல்வது?
எப்படியும் காட்டை கடக்க வேண்டுமானால் 500 மைல் தாண்டிச் செல்ல வேண்டும்!
!!

நமக்கு எப்படியும்
ஜீப் வேணும்! வாருங்கள்
தீயை அணைக்க முயற்சி
செய்வோம்!


அய்யோ! போச்சு!
முழுவதும்
எரிந்துவிட்டது!


முட்டாள்!
பெட்ரோல் டேங்கையா
சுட்டுத் தொலைப்பாய்!
எப்படியோ
குறி தவறிப்
போச்சு!


இனிமேல் 500 மைல் நடந்துதான் போகவேண்டும்! சோறு தண்ணி எதுவும் கிடைக்காது!
காட்டுமிராண்டி, மிருகங்களின் தொல்லை வேறு இருக்கும்!


கையில் துப்பாக்கி இருக்கு! வேட்டையாடினால் சாப்பாடு! கொஞ்சம் வேகமாக நடந்தால் ஊர் போய் சேர்ந்து விடலாம்!
சரி அந்த டிரைவர் என்ன ஆனான்?


ஜீப்பில் ஆள் இல்லையே?
இங்கேதான் இருப்பான்! சுத்திப்பாரு!

ஒரு மரத்துக்கு கீழே டிரைவர் அமர்ந்திருந்தான்.
அதோ இருக்கான்! டேய் இனி நீ ஓட முடியாது!
உன்னை சும்மாவிட மாட்டோம்!
அதற்குள் மரத்தில் இருந்த மாயாவி அவர்களை நோக்கி குதித்தார்.
ஆ.... அம்மா....!
!!
படார்!
யாரு நம் மேல் விழுந்தது! ஒருவனையும் காணவில்லையே?
ஆ!


அதற்குள் மாயாவி அவர்களை திடிரென்று தாக்கினார்.
படார்.!
ஆ... அம்மா!

அம்மா...!
கும்.!
படார்...!


மாயாவி அவர்களது தலையைப் பிடித்து மோதினார்.
இங்கே வந்து தொல்லையா செய்கிறீர்கள்?
!!
டமார்...!

முரசு அடிப்பவனை கொல்லவா பார்க்கிறீர்கள்?
மாயாவி! அவர்கள் மிகவும் கொடூர மானவர்கள்!
சும்மா வேடிக்கைக் காகத்தான அவனை மிரட்டினோம்!
இனி அதெல்லாம் இங்கு நடக்காது!
மாயாவி கடற்கரையில் ஆளுயரத்துக்கு குழியைத் தோண்டி அவர்களை இறக்கி மூடினார்.
அவர்கள் தலை மட்டும் மணலுக்கு வெளியே இருந்தது.
டேய்... என்னடா இது!
அயயோ...! நகரமுடிய வில்லையே?
மாயாவியும் முரசு அடிப்பவனும் மறைந்திருந்து அவர்களைப் பார்த்து சிரித்தார்கள்.

யார் அந்த
முகமூடி?
திருடனாக
இருக்கும்!
நம்மை இப்படியா
சாகடிப்பான்!


அன்பில்லாமல் தங்கத்
தீவுக்கு வருகிற எவனும் பரிதாபமாக சாவான்!
?!
?!
ஆ...!
அம்மா...!

மாயாவி அவர்களை நோக்கி வந்தார.

எங்களை விட்டுவிடு! பணம் நிறைய தருகிறோம்!
விடுறதா? உங்களையா? அனாவசியமாக இங்கே வந்ததுமில்லாமல் முரசு அடிப்பவனை கொல்லப் பார்த்தீங்க...?
உங்கள் சதித்திட்டத்தை ஒட்டுக்கேட்ட இந்த டிரைவரையும் கொல்ல முயற்சி செய்தீங்க!
உங்கள் திட்டம் எதுவும் பலிக்கவில்லை! ஏன் என்றால் உங்களால் குறிதவறாமல் சுடத் தெரியவில்லை!
திடீரென தங்கத்தீவில் மகிழ்ச்சி ஆரவாரம் கேட்டது.
இது காதலுக்காக ஏற்பட்ட புனிதமான இடம். இதைப் பாருங்க!
லோங்கோவினருக்கும், வாம்பசியினருக்கும் இது திருமண காலம்! இங்கே சாவும், கொலையும் நடக்க விடமாட்டேன்!
?


புதுமணத் தம்பதிகள் மகிழ்ச்சியுடன் தீவுக்கு வந்தார்கள்.
திருமணத்தை முடித்து வைக்க மதகுருமார்கள் வந்திருந்தார்கள்.
மதகுரு! இந்தப் போக்கிரிக்காக மதச்சடங்கை நிறுத்த வேண்டாம். தெடர்ந்து நடக்கட்டும்!
அப்படியே செய்கிறோம் மாயாவி!
உடனே புதுமணத் தம்பதிகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப் பட்டது.
???

திருமணம் முடிந்ததும் தம்பதிகள் கடலில் குளித்தார்கள்.


கடலில் குளித்துவிட்டு, கடற்கரை மணலில் புரண்டு எழுந்தார்கள்.


அதன்பிறகு மணமக்கள் கைகோர்த்துக்கொண்டு மரகதக்குடிலுக்குள் நுழைந்தார்கள்.

அதன்பிறகு மணமக்கள் காட்டுக்குள் செல்ல புறப்பட்டார்கள்— குதூகலத்துடன்.
பார்த்தீர்களா ? தங்கக்கடற்கரை எவ்வளவு புனிதமானது !
இந்த புனித பூமியில் ஆண்டுதோறும் திருமணம் நடக்கும். இதைப்போய் பாழ்படுத்த முயன்றால் விடுவேனா ?
300 ஆண்டுகளுக்கு முன் இந்த இடத்தை கறுப்பு மாமன்னர் சாம்ராட் மரகத் கல்லால் குடிலைக் கட்டினார்.
தன் புதுமனைவியுடன் இந்த மரகத் குடிலுக்கு முதலிரவை கொண்டாட வந்தார்.

ஆனால் அவளோ பிரசவத்தில் இறந்து போனாள். அதன் பிறகு அந்த மன்னர் இங்கே வரவேயில்லை!
மாயாவி! தங்கத்தீவை நீயே வைத்துக்கொள்! அன்பில்லாமல் தங்கத்தீவிற்கு வருகிறவன் பரிதாபமாக இறப்பான்!
மிருகங்களை வேட்டையாடுவதை பொழுதுபோக்காக நினைத்து இங்கே வந்தீர்கள்! அதனால் தங்கக் கடற்கரை மணலின் இரகசியம் தெரிந்துவிட்டது!
ஆமாம்! இதில் பாதிக்குப் பாதி தங்கம்தான். உங்க பேராசையால் இரண்டு பேரை கொல்லப் பார்த்திங்க!
மாயாவியும் மற்றவர்களும் அவர்களை தனியே விட்டுவிட்டு புறப்பட்டார்கள்.
இவர்கள் வெய்யிலில் காய்ந்தது போதுமா?
அய்யா! உதவி செய்யுங்கள்!
அய்யோ! எங்களை விட்டுவிட்டுப் போகாதீர்கள்!
மாயாவி மறைந்திருந்து பார்த்தார்.

மாயாவி அவர்களை நோக்கி வந்தார்.
அய்யோ!
தாகம்...
ஆ
தாகம் உயிரை எடுக்கிறதே?
தண்ணீர் கொடுங்க அய்யா...!
ஆ...! தாகம்...!
ஆ... தண்ணீர்...!
மூவரையும் குழியில் இருந்து தூக்கினார்கள்.
மூவருக்கும் தண்ணீர் கொடுக்கப்பட்டது.
இவர்களுக்கு இப்போது இந்த தங்கமணலைவிட தண்ணீர்தான் பெரிதாகத் தெரிகிறது!
மடக்...!
மடக்...!
ஆ...

இந்த வீரர்கள் உங்களை கிராமத் தலைவரிடம் இழுத்துச் செல்வார்கள்! நீதி விசாரணை செய்து உங்களுக்கு தண்டனை வாங்கித் தருவார்கள்!
நகர் சட்டப்படியா...?
நீங்க மீறினது காட்டுச் சட்டம். சில ஆண்டுகள் இங்கே கடுமையாக உழைக்கனும்! அதுதான் தண்டனை!
பழங்கால சட்டப்படி உங்களை தண்டிக்காமல் விட்டதே பெரிய விசயம்!
காட்டு வீரர்கள் மூவரையும் அழைத்துப் போனார்கள்.
அன்பில்லாமல் தங்கத் தீவுக்கு வருகிறவர்கள் பரிதாபமாக இறப்பார்கள்!!
(முடிந்தது)

விண்வெளிவீரர் பிளாஷ்கார்டன் தோன்றும்

பனிமலை இரகசியம்

விண்வெளி வீரர் பிளாஷ்கார்டன் தன் நண்பரான விஞ்ஞானி சர்கோவுடன் விண்வெளிக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்தார்.
பிளாஷ்! பூமியை நெருங்கி விட்டோம் என நினைக்கிறேன்!
பட்டனை அழுத்திவிட்டால் தெரிந்துவிடப் போகிறது!
ஆமாம் பூமிதான்!
பூமியின் கட்டுப்பாட்டில் ஒரு விண்கலம் சுற்றிக்கெண்டிருந்தது.
இவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்!
விண் கலத்துக்கு உதவும் கலம்! யார் என்று சொல்லவும்.
பிளாஷ்! சர்கோவ்! நீங்களா? என்னாச்சு நான்கு வாரங்களாக ஆளையே காணோம்!
அதை ஏன் கேட்கிறீர்கள்? பூமிக்குள் செல்ல வழி ஏற்படுத்திக் கொடுங்கள்!

சர்கோவ்! விண்ணகத்தில் எத்தனை நாள் இருந்திருப்போம்!
டேல் சாப்பிட கூப்பிட்டதுக்குகூட போகாமல் புறப்பட்டோம். எப்படியும் 4 வாரம் இருக்கும்!
டேலை தேடியும் கிடைக்க வில்லை! அவர்கள் அனுப்பிய செய்தி பதிவான டேப் போடுகிறேன்!
டேல் திரையில் தோன்றினாள்.
பரவாயில்லை! டேல் நன்றாகத்தான் இருக்கிறாள்!
பிளாஷ்! என் நினைவு உங்களுக்கு இருக்கும் என்று நினைக்கிறேன்!
இக்கட்டான நேரத்தில் நண்பரின் அழைப்பு! தட்ட முடியவில்லை!
என் செய்தியை நீங்க கேட்கிற நேரத்தில்...!

நான் மாங்கோவில் இருப்பேன்!
என்னை விட்டுட்டா மாங்கோ போகிறாய்?
பூமிக்கு அப்பால்—
வல்டன் அரசே! விருந்து அருமை!
அந்த நகரின் பெயர் காக்மன்.
டேல்! இது நம்முடைய நட்புக்கு அடையாளம் தான்!
சரியாக சொன்னீர்கள்!
அப்போது— மாங்கோவில் ஒரு விண்கலம் நுழைந்தது.
மாங்கோவை நெருங்கி விட்டோம்! படைகள் தயாராகட்டும்!
மாலைப்பொழுது இனிமையாக கழிந்தது!
உனக்கு விடை தரவேண்டுமா?

பூமியைவிட்டு புறப்பட்டதில் இருந்து ஓய்வே இல்லை!
அப்படியா?
டேலை விருந்தாளி அறைக்கு அழைத்துச் செல்லுங்கள்!
நாளைய விருந்துக்கு இன்றே ஓய்வு எடுங்கள்!
அடேயப்பா! இன்னும் விருந்து இருக்கிறதா!
நள்ளிரவு— ஒரு விண்கலம் வான்நகர் நோக்கி வந்தது.
காக்மன் உத்தரவு! வருவது யார்! விபரம் தேவை!
நகர் இளவரசருடைய கலம் இது. எந்திரக் கோளாறு. அவசரமாக இறங்க வேண்டும்!
அவசரமா! உடனே இறங்கலாம்!
விமானதளம் தயாராக இருக்கிறதா?

காவலைமீறி அன்னியர் இறங்கக் கூடாது!
அதை நாங்கள் ஒத்துக்க முடியாது!
வந்த விண்கலத்தில் இருந்து தொபு தொபுவென்று வீரர்கள் இறங்கினார்கள்.
காவலாளிகளை மடக்கிவிட்டோம்! சூறை யாடத் தொடங்குவோமா?
வந்தவர்கள் பிடிமானக் கம்பிக ளாலும், உறிஞ்சும் காலனிகளோடும் விரைந்து ஏறினார்கள்.
இதோ காக்மன் நாட்டின் கருவறை!
காவலாளி முழிப்பதற்குள் வேகமாக செல்!

அரண்மனைக்குள்ளே– டேலின் அறைக்குள் புகுந்தார்கள்..
அட அழகான பெண்! சிறகில்லா அழகி!
யார் நீங்கள்?
இளவரசர் அரோவுக்கு பரிசு இவள்!.
சிறிது நேரத்தில்
அய்யோ கஜானாவை திருடிட்டு டேலையும் கடத்திட்டு போறாங்க!
வல்டன் அரசே! உங்களை வீடியோவில பார்க்கணுமாம்!
அரசே! நகூர் இளவரசர் இதோ! படையை அனுப்பினால் உன் படை காலி!
உன் பணத்தை நல்லதுக்குதான் செலவு செய்கிறோம்!

அதே நேரம் பிளாசின் விண்கலம் மாங்கோர் கோளை நோக்கி வந்தது.
நாம் சரியான பாதையில்தான் செல்கிறோம்!
மாங்கோவில்—
பிளாஷ்! உங்களை எதிர்பார்க்கவே இல்லை! டேல்—வல்டன் நாட்டு விருந்தாளியாக இருக்கிறாள்!
ரொம்ப நன்றி பாரன்!
பிளாசின் விண்கலம் வல்டன் நாட்டில் இறங்கியது.
நாங்கள் வல்டன் நாட்டு அழையா விருந்தாளிகள்!
இல்லை இல்லை! ஆனால் நாங்கள் கெட்ட செய்தியோடு காத்திருக்கிறோம்!
மாங்கோவின் பனிப்பிரதேசத்தில்—
நம்முடைய கொள்ளை இளவரசரை மகிழ்ச்சிப் படுத்தும்!
ஹா...ஹா...! போதாக்குறைக்கு அழகியை வேறு கொண்டு வந்திருக்கிறோம்!
நல்ல வேட்டைதானா?
வல்டன் நாட்டு கஜானா காலி!
உங்களுக்காக் அழகியை வேறு கொண்டு வந்திருக்கிறோம்!

அட எனக்கு அழகிய பரிசா? இவள் பிளாஷ்கார்டனுக்கு வேண்டியவள் ஆயிற்றே?
இளவரசன் டேலை நெருங்கி அணைக்க முயன்றான்.
ஆ... என் கையை கடிச்சிட்டா?
கைக்கட்டு அவிழ்த்துவிட்டால் உன் கழுத்தை நெறித்து விடுவேன்!
அவளை என் வழிக்குக் கொண்டு வாங்க! அடிமையாய் இருக்கட்டும்! அதன் பிறகு என் அந்தப்புரத்துக்கு வரட்டும்!
ஆகட்டும் அரசே!
அதே நேரம்— வல்டன் நாட்டில்
டேலையும், கொள்ளை யடித்த பொருளையும் மீட்டு வருகிறோம்!
ரொம்ப நன்றி பிளாஷ்
மாங்கோவின் தென் துருவத்தில்—
போதும்! நாம் இங்கேயே இறங்குவோம்!
2

ஆவ்! பனிக்குளிர் கத்திபோல வெட்டுகிறதே!
உடுப்பை சூடாக்கிக் கொள்ளுங்கள்!
ரேடியோ தொடர்பு இருக்கட்டும் பரவுங்க!
டேலுக்கு ஆபத்து வரும்முன் அவளை காப்பாற்ற வேண்டும்!
அது என்ன பனிக்கட்டி பிளக்கிறது!

இது இராட்சத மிருகம்! பேசாமல் ஒதுங்கி செல்வோம்!
இதனுடைய மூச்சுக் காற்றில் மின்சக்தி பாயும்!
பிளாசும் எதிர்த்துச் சுட்டார்.
டுமீல்....!
நாம் தாக்கினதுக்கு பலன் இருக்கு!
அந்த இராட்சதமிருகம் தாக்குண்டு இறந்தது.

நகரை அடைவதற்குள் இதுபோல இராட்சத மிருகங்களை சந்திக்க நேரிடும்!
இளவரசன் அரோக்கின் அரண்மனையில்—
ஏய்... சீக்கிரமாக வேலையை முடி!
டேலை சமையல் கட்டில் கொடுமைப் படுத்தினார்கள்.
இல்லை என் சாட்டை உன் முதுகில் விளையாடும்!
எனக்கு ஏன் இந்தக் கொடுமை! பிளாஷ் இல்லாமல் தனித்து புறப்பட்டு ஆபத்தில் மாட்டிக்கொண்டேனே!
அரோக் வந்தார்.
அந்த அழகி எனக்கு அடி பணிகிறாளா? சமையல் அறை வேலை இவளை மாற்றிவிடுமா?
இணங்குகிறாயா இல்லையா?

அய்யா! அவளுடைய திமிர் அடங்கிப் போச்சு!
அரோக் டேலை நெருங்கினான்.
ஏய் என்ன
அடச்சி... சீ! என் மேல் காரித் துப்புகிறாய்?
இவளை இருட்டறையில் அடைத்து வையுங்க! இவள் என் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கனும்!
நகூருக்கு அருகே—
கடார்! நீங்கள் தயார் தானே?
பிளாஷ்! உங்கள் கட்டளைக்காக காத்திருக்கோம்!
இளவரசே! பனிப் பிரதேசத்தில் வினோதமான விளக்கொளி தெரிகிறது!

உடனே அவர்கள் பனி பிரதேசத்துக்கு வந்து பார்த்தார்கள்.
என்ன அது!
பாசறை விளக்கா?
இல்லை எதிரிகளா?
அதற்குள்— பிளாஷ்கார்டன் பனிமலையை லேசர் துப்பாக்கிகளால் நொறுக்கினார்.
முதலில் சிகரத்தை உடைத்தெறிவோம்!
அருமை! பனிமலை நொறுங்கிறது!
இளவரசர் அரோக்!
பிளாஷ்கார்டன் குரல் கொடுத்தார்.
உங்களை சூழ்ந்துவிட்டோம்! டேலையும் கொள்ளையடித்த பொருளையும் திருப்பிக் கொடு! இல்லை செத்து மடிவாய்!
காக்மன் வீரர்கள்!
சரண் அடைய வேண்டுமா? எங்களுடன் போரிட வா! அவர்களை அழியுங்கள்!
அரோக் கட்டளையிட்டார்.


அதோ பாருங்க!
பனிமலைக்கு அந்தப்புரமாக இருந்து தாக்குகிறார்கள்!
எங்களிடம் சரண் அடையாவிட்டால் உங்கள் நாடு சிதறிவிடும்!
அதோ... அதோ!
எதிரி செத்தான்!
பனி கட்டியின் மேலே காக்மேன் வாகனம் வந்தது.
அய்யோ! பனிக்கட்டி உருகி உடையுதே!
வண்டி சறுக்குகிறதே!
திரும்பிச் சென்று விடுவோமா?
இனி நடக்காது!
நாசகாரக் கருவி, பனிக்கட்டியை பிளந்துவிட்டது!
பீரங்கிப்படை இல்லாமல் எதுவும் நடக்காது!

பனி மலைக்கு அடியில் உள்ள ஒரு இருட்டறையில் டேல் சிறை வைக்கப்பட்டிருந்தான்.
அரோக்! மரியாதையாக சரண் அடைந்து உன் நாட்டை பாதுகாத்துக்கொள்!
பிளாஷ் குரல் மாதிரி இருகிறதே?

முட்டாள்களே! நாங்கள் எதையும் திருப்பித் தரமாட்டோம்! உங்கள் தலைவன் என்னோடு மோதத் தயாரா?


இரு படைகளும் மாறி மாறி சுட்டுக்கொண்டார்கள்.
டுமீல்.!
டுமீல்.!

என்னுடன் மோத வா! இல்லை என் நாடு அழிஞ்சாலும் எதுவும் தரமாட்டேன்!
அரோக்! உன் சவாலுக்கு நான் தயார்!
டேலும், பொருளும் திரும்ப கிடைக்கணும்னா, நானும் உன்னுடன் மோதத் தயார்!
சரி அரோக்
டேலும் அதைக் கேட்டாள்.
பிளாஷ்! அவனை நம்பலாமா? அவன் ஒரு பித்தலாட்டக்காரன்.
பிளாஷ்கார்டனும், அரோக்கும் வாளுடன் மோதத் தயாரானார்கள்.
அரோக் விரைப்புடன் மெதுவாக வந்தான்.

என்ன பிளாஷ்! சாகப் பயப்படு கிறாயா?
இவன் குரல் மனிதக்குரல் போல தெரியவில்லை?
இவன் அரோக் இல்லை! அவனைப் போல எந்திர மனிதன்!
பிளாஷ்! நீ இத்தோடு காலி!
பித்தலாட்டக்காரனே! உன் பேச்சை நம்பி நான் வந்தேன் பார்!
என் வாக்கு தவறக்கூடாது என்பதற்காக இப்படி வந்தேன்!
இந்தக் கேடயம்கூட எனக்குத் தேவையில்லை!
அப்படியா?
என் கத்திகூட கவசத்தைவிட மென்மையானது!
பார்த் தாயா? என் வாள் ஒடிந்து விட்டது!
எந்திர மனிதன் பிளாசை தாக்க வர, பிளாஷ் விலகிக்கொள்ள அவன் நிலை குனிந்தான்.

அதற்குள் பிளாஷ்கார்டன் கேடயத்தை வைத்து எந்திர மனிதனின் கழுத்தை நசுக்கினார்.
புஷ் புஷ்...
உர்...உர்...
அத்தோடு எந்திர மனிதன் காலி.
ஒப்பந்துப்படி நானே வென்றேன்! ஆனால் நீங்கள் ஏன் என்னை சுட வருகிறீர்கள்!
அதே நேரம் கடார் வந்தான்..
டுமீல்...!
கடார்! சரியான நேரத்தில் வந்தாய்...!
பிளாஷ்! வேகமாக ஏறு!
பிளாஷ் சட்டென்று வாகனத்தில் தாவி ஏறினார்.
உள்ளே ஏறுங்க!
அதோ நம்முடைய முற்றுகைப் படை! அவர்களை சும்மா விடக்கூடாது!

அரோக் பீதியில் இருந்தான்.
அரோக்! அவர்கள் நம்மை சூழ்ந்திட் டாங்க!
நாம் அழியப் போகிறோம்!
ரோசமுள்ளவர்னா உடனே முடிவு எடுங்க!
அவர்கள் ஆயுதம் முன் நாம் வெறும் தூசி! பிளாசோடு போய் போரிடுங்க!
எந்திர மனிதன் கதிதானே எனக்கும் ஏற்படும்!
அதற்குள் அவர்களே அரோக்கை தூக்கி வெளியே போட்டார்கள்!
பிளாஷ்! அரோக் இங்கு இருக்கிறான்!
அரோக் வெலவெலத்துப்போய் இருந்தான்.
பிளாஷ்! என் மேல் இரக்கம் காட்டுங்க!
சவாலை முடிக்கிறது என் வழக்கம். வா ஆயுதம் இல்லாமல் மோதுவோம்!
சே! நம்ம மானம் போகுது அவனுடன் மோது!

உடனே அரோக் பிளாசை தாக்க முயல. பிளாஷ் குனிந்துகொண்டார்.
வேறு வழி யில்லேன்னு என்னுடன் மோதுகிறாயா?
அதற்குள் பிளாஷ் ஓங்கி ஒரு குத்துவிட்டார்.
பலே...!
கும்...!
நிராயுதபாணிகிட்ட நான் மோதுவது இல்லை!
ஆ...!
பளார்!
அரோக் தரையில் வீழ்ந்தான்.
டமார்!
டேலை எங்கே? அவளுக்கு எதுவும் ஆகியிருந்தால் உங்களை உயிரோடு கொளுத்தி விடுவேன்!
அழகி! உனக்கு அழைப்பு! வந்திருக்கிறது! வா போகலாம்!

அட... பிளாஷ் நீங்களா?
டேல்! உனக்கு ஒன்னும் ஆபத்தில்லையே?
இல்லை டார்லிங்!
இதோ! நாங்கள் கொள்ளையடிச்ச பொருட்கள்!
ஒரு துளி தங்கம்கூட குறையாது!
தப்பிச்சிங்க!
எங்களுடன் வா! உன் மேல் கொலை, கொள்ளை குற்றம் இருக்கிறது.
நாங்கள் நான்கு பேர்தான் வந்தோம்! இனியாவது எங்கள் பலம் தெரியட்டும்!
நாம் வெற்றியுடன் திரும்புவதை அறிந்தால் விழா கொண்டாடுவார்கள்!
(முடிந்தது)

தங்கக் கிளி

அமுதா கணேசன்

17.

முன்கதை சுருக்கம்:-

சகல சக்திகளைப் பெற்ற மாயன் என்ற மந்திரவாதி, எழில்புரி நாட்டு இளவரசி பொற்செல்வியின் அழகில் மயங்கி அவளை மணக்க விரும்பினான். அவள் மறுக்கவே எழில்புரி நாட்டையே கல்லாக்கி விட்டான். பொற்செல்வி மனம் மாறும்வரை நீ தங்கக்கிளியாக மாறிப்போ என்று சாபமிட்டான். தன்னையும் தன் நாட்டையும் மீட்க ஒரு வீரனைத் தேடி அலைந்தாள். முடிவில் சிங்கபுரி இளவரசன் அஞ்சாநெஞ்சனை கண்டுபிடித்து அவனிடம் உதவி பெற முயன்றாள்.

மேகமலையில், மந்திரவாதி மாயனின் குகை.

காளி பீடத்தின் முன் அமர்ந்து அவன் பூஜை செய்துகொண்டு இருந்தான். கண்களை மூடியபடி காளியை வழிபட்டான்.

பிறகு கண்களைத் திறந்து "மாகாளி! எனக்கு சகலவல்லமையும் வழங்கினாய். நான் நினைத்தது எல்லாம் கிடைத்தது. ஆனால், நான் விரும்பிய பெண் எனக்குக் கிடைக்கவில்லையே இது ஏன்?" என்று வினவினான்.

காளியிடம் இருந்து பதில் ஏதும் இல்லை.

அவன் பூஜை செய்வதற்காக மூட்டிய நெருப்பு இன்னும் எரிந்துகொண்டு இருந்தது.

"ஜெய் காளி" என்று நெருப்புக்கு நேராக கையை நீட்டினான்.

நெருப்பின் நடுவே ஒருவன் தோன்றினான்.

"ஏ... காளி! பெண்களை வசியப்படுத்த என்ன செய்ய வேண்டும்?" அவனிடம் மாயன் கேட்டான்.

"நெருப்பிலே பூக்கும் பொற்றாமறை இருக்கிறது! அதைக் கொண்டு வந்து, நீ விரும்பும் பெண்ணின் கூந்தலில் சூடினால் அவள் உனக்கு வயப்படுவாள்" என்று சொன்னான்.

எனக்கு ஒரு "பொற்றாமரை வேண்டும்! உடனே கொண்டுவா" என்று மாயன் கட்டளையிட்டான்.

அப்போது காளி சிலையிலிருந்து "கலகல" என்று சிரிக்கும் ஒலி கேட்டது.

அது கேட்டு மாயன் திகைக்கான். "காளி.ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான்!

காளி சிலை பேசியது. "மாயா! ஒரு பெண் தானாகவே உன்னை விரும்ப வேண்டும். இதுதான் போட்டி. இதை மறந்துவிட்டாயா?"

"அவள் மனதில் என் மீது விருப்பத்தை ஏற்படுத்தப் போகிறேன்: இதில் என்ன தவறு?"

"விருப்பம் தானாக ஏற்பட வேண்டும்!"

"என்னை வேறு என்னதான் செய்யச் சொல்லுகிறாய் காளி! என்னை தோற்கச் சொல்லுகிறாயா? அது என்னால் முடியாது?"

"நீ விரும்பிய பெண் உன்னைத் தேடி வந்துகொண்டு இருக்கிறாள்."

"உண்மையாகவா?"

"ஆமாம்! ஆனால் அவளை நீ கிளி ஆக்கியதும், அவள் தந்தையையும் நாட்டு மக்களையும் கல் ஆக்கியதும் தவறு. அதன்மூலம் அவள் உன்னைத் தேடி வரும்படி கட்டாயப்படுத்திவிட்டாய்!"

"எப்படியோ அவள் என்னை விரும்பவேண்டும். இப்பொழுது அவள் என்னை விரும்பித்தானே வந்துகொண்டு இருக்கிறாள்!"

"அவள் வருவாள்! அவளிடமே கேட்டுத் தெரிந்துகொள்."

"எப்பொழுது வருவாள்?"

"இப்பொழுது வந்துவிடுவாள்."

மந்திரவாதி மாயன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். உடனே தன்னை அழகுபடுத்திக்கொள்ளத் தொடங்கினான்.

மேகமலையில் வந்து பறக்கும் கம்பளம் இறங்கியது.

அஞ்சாநெஞ்சன், புலிக்கண்ணன், வில்லாளன் மூவரும் கம்பளத்தில் இருந்து எழுந்தார்கள்.

புலிக்கண்ணன் பத்திரமாக கம்பளத்தை சுருட்டி வைத்துக் கொண்டான்.

மூவரும் குகையைத் தேடி மலையில் நடந்தார்கள்.

அப்பொழுது அஞ்சாநெஞ்சனின் குதிரை வந்தது.

குதிரை மீது வந்த தங்கக்கிளி, ஒரு மரத்தில் போய் உட்கார்ந்து கொண்டது.

புலிக்கண்ணனும், வில்லாளனும் முன்னே நடந்தார்கள்.

அஞ்சாநெஞ்சன் ஏமாற்றத்தால், சோர்ந்துபோய் அவர்களின் பின்னே வந்தான். அத்துடன் குதிரையும் வந்தது.

"குதிரை வந்துவிட்டது. பொற்செல்வி என்ன செய்கிறாளோ!" என்று அஞ்சாநெஞ்சன் கவலைப்பட்டான்.

அப்பொழுது தங்கக்கிளி பறந்து வந்து குதிரை மீது அமர்ந்தது.

"இளவரசே! நானும் வந்துவிட்டேன்" என்று அஞ்சாநெஞ்சனுக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல கூறியது.

அவன் மகிழ்ச்சி அடைந்தான்.

தங்கக்கிளி மீண்டும் மரத்துக்குப் பறந்துபோய்விட்டது.

அவர்கள் மலையில் வெகுதூரம் நடந்தார்கள். அவர்கள் பின்னேயே தங்கக்கிளியும் மறைந்து, மறைந்து சென்றது.

"அதோ ஒரு குகை" என்று வில்லாளன் காட்டினான்.

"அந்தக் குகையில்தான் மாயன் இருக்கக்கூடும்" என்றான், புலிக்கண்ணன்.

"இப்பொழுதாவது அவனைக் கொல்லும் வழியைச் சொல்" என்று அஞ்சாநெஞ்சன் கேட்டான்.

"சொல்லுகிறேன்" என்றான் புலிக்கண்ணன். "இங்கே ஓர் எரிமலை இருக்கிறது. அந்த மலைக்கு அடியில் மாயனின் உயிர் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது" என்று கூறினான்.

"எரிமலை எங்கே இருக்கிறது? சொல்" என்று அஞ்சாநெஞ்சன் அவசரமாகக் கேட்டான்.

"இந்த மலைத் தொடரிலேயே இருக்கிறதாம்" என்று புலிக்கண்ணன்

தெரிவித்தான்.

"சரி. நான் குதிரை மீது போய் பார்த்துவிட்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று அஞ்சாநெஞ்சன் சொன்னான்.

"இந்த வாளை வைத்துக்கொள். மலையைக்கூட பிளக்கக்கூடியது இது" என்று புலிக்கண்ணன் அவனிடம் வாளைக் கொடுத்தான். 'மந்திரவாதி எனக்கு கொடுத்த வாள் அது.'

அதை வாங்கிக்கொண்டு குதிரையில் ஏறிக்கொண்டு, அஞ்சாநெஞ்சன் விரைந்து போனான்.

எரிமலையைத் தேடிக்கொண்டு அஞ்சாநெஞ்சன் போனான்.

இளவரசி பறந்துவந்து அவனுடன் சேர்ந்துகொண்டாள்.

"இளவரசே! அவர்கள் யார்? அவர்களை விட்டுவிட்டு எங்கே போகிறீர்கள்?" என்று பொற்செல்வி கேட்டாள்.

"அவர்கள் தங்கக்கிளியைப் பிடிக்க வந்தவர்கள்" என்று அஞ்சாநெஞ்சன், சுருக்கமாக விவரம் சொன்னான். "இப்பொழுது நான் எரிமலையைத் தேடிப் போய்க்கொண்டு இருக்கிறேன்."

"எரிமலைக்குள் எப்படிப் போவீர்கள்?"

"நான் முதலில் பறந்துபோய் எரிமலை எங்கே இருக்கிறது என்று பார்த்துவிட்டு வருகிறேன்."

பொற்செல்வி வேகமாகப் பறந்து சென்றாள்.

வெகுதூரம் பறந்து சென்றபின்பு எரிமலையைப் பார்த்தாள். அது 'குபுகுபு' என்று நெருப்பைக் கக்கிக்கொண்டு இருந்தது. ஊற்றுப் பொங்கியது போல நெருப்புக் குழம்பு வடிந்தது. மலையைச் சுற்றிலும் நெருப்புக் குழம்புதான். எரிமலைக்கு அருகில்கூட, யாரும் போக முடியாது.

பொற்செல்வி திரும்பி வந்தாள். மிகவும் ஏமாற்றத்துடன் காணப் பட்டாள்.

"இளவரசே! எரிமலை நெருப்பை கக்கிக்கொண்டு இருக்கிறது. அங்கே உங்களால் போகமுடியாது" என்று சொன்னாள்.

"என்னால் முடியும்" என்று அஞ்சாநெஞ்சன் அழுத்தமாகச் சொன்னான். நீ சுயஉருவம் பெறவேண்டும். அதற்காக நெருப்பில் நீந்தக்கூட நான் தயாராக இருக்கிறேன்" என்றான் அவன்.

"இளவரசி! எனக்கு ஓர் உதவி செய்வாயா?"

"என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்."

"நான் எரிமலைக்குப் போகிறேன். நீ குகைக்குப் போ."

"குகையில் மந்திரவாதி இருப்பானே!"

"அவனிடம் நீ பேசிக்கொண்டு இரு. அவன் கவனத்தை உன் பக்கம் திருப்பு. எரிமலையில் என் வேலை முடிய அது உதவியாக இருக்கும். நான் எரிமலைக்குச் செல்வது அவனுக்குத் தெரியக்கூடாது."

"சரி நான் குகைக்குப் போகிறேன். நீங்கள் கவனமாகப் போய் வாருங்கள்."

"நீ தைரியமாக இரு. நான் சீக்கிரம் திரும்பி வந்துவிடுவேன்."

பொற்செல்வி குகையை நோக்கிப் பறந்தாள்.

அஞ்சாநெஞ்சன் எரிமலையை நோக்கிச் சென்றான்.

வில்லாளன், புலிக்கண்ணன் இருவரும் குகையின் எதிரில் நின்றுகொண்டு இருந்தார்கள்.

குகை திறந்து இருந்தது. ஆனால், உள்ளே செல்ல இருவருக்கும் தைரியம் இல்லை.

கையில் தயாராக வைத்திருந்த வலையையும், கூண்டையும் வில்லாளன் காட்டினான்.

அப்பொழுது அவர்களைத் தாண்டிக்கொண்டு தங்கக்கிளி குகைக்குள் பறந்து சென்றது.

குகையின் வாசலில் வலையை வீசினார்கள்.

தங்கக்கிளியைப் பிடித்துவிட்டது போல, அப்பொழுதே இருவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

உள்ளே போன தங்கக்கிளி எப்படியும் வெளியில் வரும் என்று இருவரும் காத்துக்கொண்டு நின்றார்கள்!

அருகில் ஒரு பாறை இருந்தது.

அதன்பின்னே போய் இருவரும் மறைந்துகொண்டார்கள்.

(தொடரும்)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

வழியைக் கண்டுபிடியுங்கள்!

பூனையும் பூனைக்குட்டியும் ஒரு பந்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தன. பந்து உருண்டு ஒரு குழிக்குள் விழுந்துவிட்டது. பந்தை எடுக்க இரண்டுக்கும் வழி தெரியவில்லை! உங்களுக்கு வழி தெரிந்தால் பூனைகளை அழைத்துச் செல்லுங்களேன்!



அடுத்த
காமிக்ஸ்

முகமூடிவீரர் **மாயாவி**

தோன்றும்



கொலை வெறிக் கூட்டம்

காட்டுக்குள்ளே சதிகாரர்களின் அட்டகாசங்களை விரட்டியடிக்க வருகிறார், மாயாவி!

படிக்கத் தவறாதீர்கள்!

அக்டோபர் 16-ந்தேதி வெளிவருகிறது!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

ராணி யில்

புதிய சிறுவர்
தொடர்கதை

சிவகுமார்

எழுதும்

கொல்லிமலை மந்திரவாதி

மந்திரவாதியின் சதியை
முறியடிக்க வரும் வீர
இளவரசனின் கதை!
படித்து மகிழுங்கள்!

“ராணி காமிக்ஸ்”, சென்னை – 600 007.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS (N)/ 461
Registered as Newspaper in Sri Lanka

PARLE

என்றும் மறவோம்... வாழ்நாள் வரை

வாழ்க்கைப் பாதை இதுவே சரி

வாழ்க்கைப் பாதையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஒரு சோதனையே. எந்தப் பாதையில் செல்வது, எதைத் தவிர்ப்பது: நம்மை வேறுபடுத்தும் அடையாளம் இதுவன்றோ. ஒருவித சுயநலமின்றி, எதிர்பார்ப்பின்றி, பிறருக்கு உதவுதல்; பாதையில் செல்கையில் மற்றவர்களின் துயர் நீக்குதல். உண்மையான வாழ்க்கை என்பது இதுதானே. என்றும் மறவோம்... வாழ்நாள் வரை. வாழ்க்கைப் பாதை இதுவே சரி. வருடக்கணக்காக இந்தியாவின் அனைத்திலும் அதிகமாக விற்பனையாகும் பிஸ்கட்.

சுவை மிகுந்தது, உண்மையான சக்தி நிறைந்தது

everest/95/PPL/108tm